**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 106/2024** | **நாள் – 26.08.2025** | **சாட்சி – எ.ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆதித்யவிஷ்வா | தந்தை பெயர் | சேதுராஜன் |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |
| தொழில் | நிர்வாக அதிகாரி | வயது | 24/2025 |

**முதல் விசாரணை:**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். முதல்நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

4. விபத்தை பொறுத்த மாதிரி வரைபடம் பதிவிறக்க நகல் எ.ம.சா.ஆ.4

5. TN68 AB 5370 பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீடு பாலிசி உண்மை நகல் எ.ம.சா.ஆ.5

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

TN68 AB 5370 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து காலத்தில் காப்பீடு பாலிசி அமலில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மனுதாரர் மிதிவண்டி வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். மனுதாரருக்கு வீடானது விபத்து நடந்த இடத்தில் வலதுபுறம் இருந்தது என்றால்

எனக்கு தெரியவில்லை. ஆனால் அவர் வலதுபுறம் திரும்பும்போது விபத்து ஏற்பட்டது. மனுதாரர் அவருடைய வீட்டிற்கு செல்வதற்காக கவனமாக வாகனத்தை திருப்பி சென்றார் என்றாலும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால், காப்பீடு விதி மீறல் இருந்தாலும் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.09.26 05:11:22 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*